**SC. No. 51 /2018**

P.W.1 - ஆறுமுகம்

தேதி: 28.02.2020.

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

சிவா அக்கா வீட்டுக்காரர் ஆகியோர் சேர்ந்து 3 பேர் சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்று என்னுடைய புகாரிலும் போலிசார் விசாரணையிலும் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன். ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும் நான் சொல்வது பொய் என்றும் ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. நான் 3ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியும். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகாரை நான் கைப்பட எழுதவில்லை என்றால் சரிதான். அதில் உள்ள கையெழுத்து மட்டும் என்னுடையது. அ.சா.1 புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றும் போலிசார் எழுதிக்கொடுத்ததில் தான் நான் கையெழுத்து செய்தேன் என்று சொன்னால் என் தங்கை மகன் மணிகண்டன் தான் புகார் எழுதி என்னிடம் படித்துக்காட்டினார். அன்றைய தினம் நான் பதட்டத்தில் இருந்தேன் என்றால் சரிதான். அன்றைய தினம் நான் மணிகண்டன் படிக்ககேட்டு கையெழுத்து போட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதலில் ஒரு புகார் எழுதினோம். அது சரியாக வரவில்லை என்பதால் இன்னொரு புகாரை எழுதினோம். அன்றையதினம் இரவு 7.30 மணிக்கு காவல் நிலையத்திற்கு சென்றோம். பின்னர் இரவு 9 மணிக்கு மருத்துவமனைக்கு வந்துவிட்டோம். மணிகண்டன் எம் பி ஏ., படித்துள்ளார். என் வீட்டிற்கு மெயின் ரோடு வழியாக ஒரு

வாசலும் பின்னால் தெரு வழியாக ஒரு வாசலும் உள்ளது. அக்கம் பக்கத்தில் நிறைய கடைகள் வீடுகள் உள்ளது. என்னுடைய வீட்டின் மெயின் வாசலில் இருந்து பார்த்தால் பின் வாசல் தெரியும். பின்புறம் என்று நான் முன் விசாரணையில் குறிப்பிட்டிருப்பது தெருவழியாக உள்ள வாசலை தான். வீட்டின் பின்புறமாக காரை நிறுத்திவிட்டு என் மகளை கடத்தி சென்றதை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் என் வீட்டு மொட்டமாடியில் தூங்கி கொண்டு இருக்கும் போது என் மனைவி வந்து என்னிடம் தகவல் சொன்னார். நான் மாடியில் இருந்து இறங்கி வந்து மெயினரோடு வழியாக தான் சென்று பார்த்தேன். தெரு வழியாக செல்லவில்லை. மெயின் ரோடு வழியாக பார்த்தபோது நான் யாரையும் பார்க்கவில்லை. என் வீட்டில் இருந்தவர்கள் எல்லோரும் போய்விட்டு இருந்தார்கள். அந்த நேரத்தில் நானும் என் மனைவி மட்டும் தான் வீட்டில் இருந்தோம். எனக்கு சொந்தமாக கார் இல்லை. எங்களுக்கு சொந்தமாக கார் இருந்தது என்று என் மனைவி சொல்லியிருந்தால் அது பொய் என்றால் சரிதான். நான் வீட்டிலிருந்து வெளியே வந்து கூப்பிட்டவுடன் 500 மீட்டர் தொலைவில் உள்ள மருத்துவமனையில் உள்ள கார் ஸ்டாண்டில் இருந்து கார் வந்தது. நானும் என் மனைவி மட்டும் தான் காரில் சென்றோம். அன்று காரில் யார் ஓட்டுனர் வந்தார் என்று தெரியாது. காரை எடுத்துக்கொண்டு வேலூர் ரோட்டில் மேல் விஷாரம் வரை போய்விட்டு திரும்பி வந்துவிட்டோம். கார் கே ஏ 1734 சில்வர் கலர் இண்டிகா கார் என்று நான் சொல்லியிருப்பது மற்றவர்கள் சொன்ன தகவலை வைத்து தான் சொல்கிறேன். நான் காரை நேரில் பார்க்கவில்லை. என் அக்கா மகன் கார்த்திகேயன் மோட்டார் சைக்கிளில் போனது நான் கேள்விப்பட்டது தான். என் தங்கை மகன் மணிகண்டன் எனக்கு போன் செய்து ரொம்ப பயமாக இருக்கிறது என்று எந்த இடத்தில் வைத்து எத்தனை மணிக்கு சொன்னார் என்று சொன்னால் மாலை 4.15 மணி இருக்கும்.

எந்த இடம் என்று தெரியாது. வாடகை காரில் நாங்கள் சென்ற விவரத்தை என்னுடைய புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். வி.சி. மோட்டூர் பைபாஸ் விஷாரம் பக்கம் நான் போகும் போது மணிகண்டன் போன் செய்தார் என்ற விவரத்தை என்னுடைய புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். விஷாரம் பக்கம் நான் போகும் போது மணிகண்டன் மாமாவை கீழே தள்ளிவிட்டார்கள் என்று மணிகண்டன் சொன்னார் என்ற விவரத்தை என்னுடைய புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். திரும்ப 5 நிமிடம் கழித்து நான் மணிகண்டனுக்கு போன் செய்தபோது மாமாவை ரத்தினகிரி மருத்துவமனை ஆம்புலன்சில் ஏற்றி வாலாஜா மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக சொன்னார் என்ற விவரத்தை என்னுடைய புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் வாலாஜா மருத்துவமனைக்கு வரும்போது ஆம்புலன்ஸ் வந்துவிட்டது. உறவினர்கள் எல்லோரும் அங்கு தான் இருந்தார்கள். நான் வாலாஜா மருத்துவமனையில் இருக்கும்போது போலிசார் வந்து விட்டார்கள். போலிசார் வந்து என்னிடம், மணிகண்டன், கார்த்திகேயன் மற்றும் உறவினர்களிடம் என்ன நடந்தது என்று விசாரித்தார்கள். நாங்கள் சொன்னதை போலிசார் எழுதிக்கொண்டார்கள். போலிசார் என்னிடம், மணிகண்டன், கார்த்திகேயன் மற்றும் உறவினர்களிடம் தனித்தனியாக எழுதி கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள் என்றால் சரிதான். என் மகள் லாவண்யா சம்பவத்தின் போது பி.காம்., 2ம் வருடம் படித்துக்கொண்டிருந்தார். என் தம்பி சிவக்குமார் விபத்தில் இறந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்றும் நான் சொல்வது போல எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் உறவினர்களும் போலிசாரும் சேர்ந்து

மொத்தமாக கலந்து பேசி புகாரானது கொடுக்கப்பட்டது என்றும் அதையொட்டி போலிசார் சொல்லிக்கொடுத்ததன் பேரில் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**SC. No. 51 /2018**

P.W.2 - மணிகண்டன்

தேதி: 28.02.2020.

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

தெய்வசிகாமணி என் பெரியப்பா மகன். அவர் எனக்கு சொந்த அண்ணன் இல்லை. அவர் இந்த வழக்கில் சாட்சி இல்லை என்றால் சரிதான். சம்பவ தினத்தன்று நடந்த குடும்ப நிகழ்ச்சியில் தெய்வசிகாமணியும் வந்திருந்தாரா என்றால் இல்லை. ஆஜர் எதிரிகளில் 3 பேரை தெரியும் என்று நான் சொல்லியிருப்பது போலிசார் அடையாளம் காட்டிய பிறகு தான் அவர்களை எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. அவர்களின் பெயர்களையும் போலிசார் சொல்லிக்கொடுத்ததன் பேரில் தான் நீதிமன்றத்தில் அவர்களின் பெயர்களை குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையில் அருண் மற்றும் ரஞ்சித்தை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 24.10.2015 அன்று மதியம் 3.30 மணிக்கு நான் துர்கா டெக்ஸ்டைல்ஸ்க்கு எதிரில் நான் மட்டும் தனியாக நின்று கொண்டிருந்தேன். சென்னை செல்லும் ஜங்கஷனில் இருந்து துர்கா டெக்ஸ்டைல்ஸ்க்கு சுமார் 1 1/2 கி.மீட்டர் தூரம் இருக்கும். துர்கா டெக்ஸ்டைல்ஸில் நின்றுகொண்டிருந்தபோது பஸ் ஸ்டாண்டு ஜங்கஷனில் என் தாய் மாமா காரில் சென்றதை ஏதேச்சையாக பார்த்துதான் நான் அவரை பின்தொடர்ந்து சென்றேன். அந்த சமயத்தில் என்னுடைய இருசக்கர வாகனத்தில் வேறு யாரும் வரவில்லை. நான் மட்டும் தான் சென்றேன். கார் வளைந்து நெளிந்து சென்றதால் என் அண்ணன் கார்த்திகேயன் கீழே விழுந்துவிட்டார் என்ற விவரத்தை போலிசார் விசாரணையில்

சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஆற்காடு எஸ் எஸ் எஸ் கல்லூரி அருகில் நெடுஞ்சாலை போலிசார் நின்றுகொண்டிருந்ததாக போலிசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. காரின் வைப்பரை உடைத்து அந்த வைப்பரிலேயே கண்ணாடியை உடைக்க முற்பட்டபோது கண்ணாடியில் துளை ஏற்பட்டது என்று போலிசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரி அருண் என் மாமா சிவக்குமாரை தள்ளிவிட்டார் என்று போலிசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். அவர் கீழே விழுந்துவிட்டார் என்றும் அவரை பின்தொடர்ந்து வந்தவர்கள் தங்களை மருத்துவர்கள் என்று சொன்னார்கள் என்றும் என் மாமாவை பரிசோதித்துபார்த்துவிட்டு இறந்துவிட்டார் என்று கூறினார்கள் என்றும் சொன்ன விஷயத்தை போலிசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொன்னேன். என் பயணம் முழுக்க நான் தனியாக தான் சென்றேன். என்னுடன் யாரும் வரவில்லை. ஆற்காடு எஸ் எஸ் எஸ் கல்லூரி அருகில் நெடுஞ்சாலை போலிசாரிடம் என் வாகனத்தை நிறுத்தி எந்த விவரத்தையும் சொல்லவில்லை. அன்றைய தேதியில் நான் இருந்த பதட்டத்தில் வாகனத்தின் நம்பரை நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் நான் நேரில் பார்க்கவில்லை என்றும் வழக்கிற்காக நேரில் பாாத்ததாக பொய் சொல்கிறேன் என்றும் அந்த மாதிரி எந்த சம்பவமும் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் மாமா சிவக்குமார் விபத்தினால் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. என் மாமா சிவக்குமார் விபத்தில் இறந்தது தொடர்பாக நீதிமன்றத்தில் இழப்பீடு கோரி மனு தாக்கல் செய்து அதில் தீர்ப்பாகியுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. என் மாமா சிவக்குமார் இறந்ததற்காக என் பெரிய மாமா மற்றும் நாங்கள் அனைவரும் கலந்து

பேசி கொடுத்த பொய் புகாரின் அடிப்படையில் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**SC. No. 51 /2018**

P.W.3 - கார்த்திகேயன்

தேதி: 28.02.2020.

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு சொந்த ஊர் வாலாஜா. தண்டராம்பட்டில் வங்கியில் வேலை பார்ப்பதால் அங்கு செட்டில் ஆகிவிட்டேன். முதல் விசாரணையில் ஆஜர் எதிரிகளை தெரியும் என்று நான் சொல்லியிருப்பது பொய் என்றும் போலிசார் சொல்லிக்கொடுத்தன் பேரில் எதிரிகளை தெரியும் என்று பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மற்ற எதிரிகளை வாலாஜா பஸ் ஸ்டாண்டு ஜங்கஷனில் பார்த்தேன். அதன் பிறகு நீதிமன்றத்தில் தான் எதிரிகளை பார்த்தேன். நான் வாலாஜா பஸ் ஸ்டாண்டு ஜங்கஷனில் வைத்து இண்டிகா காரில் நான் ஒரு பக்கத்திலும் சிவக்குமார் ஒரு பக்கத்திலும் ஏறினோம். என்னுடைய இருசக்கர வாகனம் என் காலில் மாட்டிக்கொண்டதால் நான் கீழே விழுந்துவிட்டேன். அதனால் எனக்கு காயங்கள் ஏற்படவில்லை. எனக்கு அடியும் படவில்லை. அந்த ஜங்கஷனில் நிறைய கூட்டம் இருந்தது. டிராபிக்கை போலிசார் கிளியர் செய்து கொண்டிருந்தார்கள். நான் வண்டியில் இருந்து கீழே விழுந்ததை அங்கிருந்த டிராபிக்கை கிளியர் செய்த போலிசார் பார்த்துக்கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். டிராபிக் போலிசார் நின்ற இடத்திற்கு நேர் எதிரில் தான் வாலாஜா காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். நான் கீழே விழுந்து எழுந்தபோது அங்கிருந்த பொதுமக்கள் என்னிடம் என்ன நடந்தது என்று விசாரித்தார்கள். அதன்பிறகு நான் இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு தனியாக தான் சென்றேன். வழியில்

நான் டிராபிக் போலிசாரை பார்க்கவில்லை. ஆற்காடு எஸ் எஸ் எஸ் கல்லூரியை தாண்டி தான் நானும் சென்றேன். என் கூட யார் வந்தார்கள் என்று நான் பார்க்கவில்லை என்றால் நான் ஆற்காடு எஸ் எஸ் எஸ் கல்லூரியில் பிரிந்து ஆற்காடு நகரத்திற்கு சென்று விட்டேன். அங்கிருந்து நான் ஆற்காடு பஸ் நிலையம் செல்வதற்குள் மணிகண்டனிடம் இருந்து மாமா இந்த மாதிரி ஆகிவிட்டார் என்று எனக்கு போன் வந்தது. அதனால் நான் ஆற்காட்டிலிருந்து நேராக வாலாஜா அரசு மருத்துவமனைக்கு வந்துவிட்டேன். நான் வாலாஜா அரசு மருத்துவமனைக்கு வந்தபோது ஆம்புலன்ஸ் வந்துவிட்டது. உறவினர்கள் அனைவரும் வந்திருந்தார்கள். வாலாஜா போலிசாரும் வந்திருந்தார்கள். வாலாஜா அரசு மருத்துவமனையில் இருந்து வாலாஜா காவல் நிலையம் 1/2 கி.மீட்டர் தூரம் இருக்கும். வாலாஜா போலிசார் என்ன நடந்தது என்று என்னிடமும் எல்லோரிடமும் கேட்டார்கள். நாங்கள் சொன்னதை போலிசார் எழுதிக்கொண்டார்கள். எழுதியதில் போலிசார் என்னிடமும் மணிகண்டன், ஆறுமுகத்திடமும் கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள். மறுநாள் பிரேத பரிசோதனை முடிக்கும் வரை வாலாஜா அரசு மருத்துவமனையிலேயே இருந்தோம். சிவக்குமார் விபத்தில் இறந்துவிட்டார் என்று சொன்னால் அவர் விபத்தில் இறப்பதற்கு வாய்ப்பு இல்லை. சிவக்குமார் மனைவி இழப்பீடு கோரி மனு போட்டுள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் பிரகாரம் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் போலிசார் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. உண்மைக்கு மாறான பொய்யான சங்கதிகளை முதல் விசாரணையில்சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

**SC. No.  51 /2018**

P.W.4 -  ஜெயக்குமார்

தேதி:  28.02.2020.

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு  விசாரணை**

நான் அன்றைய தினம் விசேஷத்திற்கு போனேன். ஆனால் உணவு சாப்பிடவில்லை. சிவக்குமார், ஆறுமுகம் ஆகியோர் எனக்கு நல்ல பழக்கம் என்றால் சரிதான். ஆறுமுகம் சிவக்குமாருக்கு சொந்தமான கடையில் தான் நான் வாடகைக்கு இருக்கிறேன். யார் எந்த காரில் எப்படி போனார்கள் என்ற விவரத்தை நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் பார்த்தேன். ஆறுமுகத்தின் வீட்டு வாசல்படியில் நின்றுகொண்டிருந்தேன். அப்போது என் கூட தயாளன் மற்றும் சிவக்குமாரும் இருந்தார். வேறு யாரும் இல்லை. அப்போது மாலை 4 மணி இருக்கும். ஆறுமுகமும் அவர் மனைவியும் வீட்டில் தான் இருந்தார்கள். நான் மருத்துவமனைக்கு போகும் போது மாலை 4.45 மணி இருக்கும். பஸ் ஜங்கஷனில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு டிராபிக் ஜாம் ஆகிவிட்டது என்றால் டிராபிக் ஜாம் ஆகவில்லை. வண்டி கிளியராக வேகமாக போகலாம். ஜங்கஷனில் இருந்து நேரிடையாக வாலாஜா காவல் நிலையம் போகவேண்டும் என்றால் 150 மீட்டர் தள்ளி உள்ளது. வாலாஜா காவல் நிலையம் வாலாஜா பஸ் ஜங்கஷனுக்கு நேர் எதிரிலேயே உள்ளது என்றும் 150 மீட்டர் தூரம் இருப்பதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த ஜங்கஷனில் இருந்து பார்த்தால் வாலாஜா காவல்நிலையம் தெரியும் என்றால் சரிதான். அன்றைய தினம் காரை சிவக்குமார் மறித்தார் என்று என்னிடம் மணிகண்டன் சொன்னார்.

அதன் பிறகு மாமா பேனட் மேல் ஏறினார் என்று சொன்னார். கார் முன்னாடி சென்ற பிறகு அதன் பின்னாடி நான் சென்றேன் என்று மணிகண்டன் என்னிடம் சொன்னார். என்னிடம் இந்த விவரங்களை மறுநாள் தான் மணிகண்டன் சொன்னார். அன்றைய தினம் எனக்கு முன்னால் சென்ற மணிகண்டனை நான் பார்க்கவில்லை. மேற்சொன்ன விவரங்கள் அனைத்தும் எனக்கு மணிகண்டன் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். ஜங்கஷனில் போலிசார் இருந்தார்கள். அன்று இரவு புகார் கொடுக்கும்போது தான் போலிசார் என்னிடம் என்ன நடந்தது என்று விசாரித்தார்கள். நாங்கள் செல்லும் எந்த இடத்திலும் நெடுஞ்சாலை துறை போலிசார் இல்லை. நான் திரும்பி வாலாஜா பஸ் ஸ்டாண்டில் வந்து பார்க்கும்போது சிவக்குமார் உறவினர் வந்துவிட்டிருந்தார்கள். நான் போன பிறகு தான் ஆம்புலன்ஸ்ம் வந்தது. அன்றைய தினம் சிவக்குமார் உறவினர்கள் எல்லாம் சென்னை நெடுங்சாலையில் சாலை மறியல் செய்தார்கள். உடனே போலிசார் அங்கு வந்துவிட்டார்கள். மருத்துவமனைக்கும் போலிசார் வந்துவிட்டார்கள். வாலாஜா மருத்துவமனையில் எல்லோரையும் விசாரித்து எழுதிக்கொண்டு என்னிடமும், கார்த்திகேயன், மணிகண்டன், ஆறுமுகம் ஆகியோரிடம் தனித்தனியாக எழுதி கையெழுத்து வாங்கினார்கள். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் போல எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. ஆறுமுகம் மற்றும் சிவக்குமாருக்கு சொந்தமான கடையில் நான் வாடகைக்கு இருப்பதால் அவர்கள் சார்பில் போலிசார் சொல்லிக்கொடுத்ததற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.